**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் ஊழியர் பிணைப் பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பிணை பெற்றுக்கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு முதல் நிதிப் பிரமாணம் 891 இன் பிரகாரம் ஊழியர் பிணைப் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 891 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணைப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக ரூபா 396,000,000 ஆன தேறிய நிதிஏற்பாடு காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 295,746,871 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீண்டெழும் செலவினத்தில் 14 சதவீதமும், மூலதனச் செலவினத்தில் 69 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் தேவைகள் ஏற்படாமை, உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகிச் சென்றமை மற்றும் சம்பளமற்ற விடுமுறை பெற்றமை, வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றியமை, நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் அடிப்படையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் அடிப்படையில் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு கோரல் மற்றும் செலவினங்கள் இயலுமான வரை சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் தமது திணைக்களத்திற்குரிய வரைவு மதிப்பீடு, நிதிப் பிரமாணத்திற்கு இணங்க தயாரிக்கப்படுகின்றமையை கண்காணித்துக் கொள்ளல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மீளாய்வாண்டிற்காக நிதி | * ஊழியர்கள் இடமாற்றலாகிச் சென்றமை, ஓய்வு பெற்றுச் சென்றமை மற்றும் அரச நிருவாக சுற்றறிக்கை 14/2022/02 இன் பிரகாரம் சம்பளமற்ற விடுமுறை பெற்றமையினால் 1001 மற்றும் 1002 செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை இயலுமான வரை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்தமான 15 மீண்டெழும் செலவின விடயங்களில் இருந்து 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும், 02 மூலதனச் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 12,290,000 நீதி ஏற்பாடு ஏனைய 05 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 04 மூலதன விடயங்கள் என்பவற்றுக்கு மாற்றப்பட்டிருந்தமையால் நிதிப் பிரமாணங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுத்து பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை கணக்னகாய்வின் போது அவதானிக்கப்பட்டது. | * நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக காகிதாதிகளின் விலை அதிகரித்துச் சென்றமை, தொலைபேசிக் கட்டணம் உயர்வடைந்தமை, போக்குவரத்துக் கட்டணம் உயர்வடைந்தமை என்பவற்றின் காரணமாக அதற்காக ஒக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவாக இல்லாதிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஒரு செலவின விடயத்தில் 100 சதவீதமும், 27 செலவின விடயத்தில் 32 சதவீதம் முதல் 95 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதுடன் சேமிப்பிற்கான காரணங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடு சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 09 செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் பின்னரும் 02 சதவீதம் முதல் 22 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்த பிரகாரம் உறுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் இறக்குமதி வரையறையின் காரணமாக தேவையின் பிரகாரம் பொருட்கள் வழங்குவதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக நிதிஏற்பாடு மாற்றப்பட்ட செலவின விடயங்களின் நிதிஏற்பாடு 02 சதவீதம் முதல் 22 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு கோரல் மற்றும் செலவினங்கள் இயலுமான வரை சரியாக செய்யப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நிதியாண்டுக்காக வழப்பட்டிருந்த நிதிஏற்பாட்டு எல்லையை விஞ்சாதிருக்கவேண்டிய போதிலும் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட செலவின விடயம் ஒன்றில் நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 816,709 பொறுப்புக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நடு அரைப்பகுதியில் தொலைபேசிக் கட்டணம் உயர்வடைந்தமை மற்றும் இந்தத் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களின் பிரகாரம் தொலைபேசி மற்றும் இணையதள செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் வசதியினமாக இருந்ததன் காரணமாக இந்த ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டை விட அதிக செலவினங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, திறைசேரி ஒவ்வொரு செலவினத் தலைப்புக்களுக்கும் உரியதாக விநியோகிக்கின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று (SA 92) உடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். திணைக்கள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 13,457,528 ஆக இருந்த போதும் திறைசேரி அறிக்கையின்படி அந்த மீதி ரூபா 14,297,162 ஆனமையால் ரூபா 839,634 இனால் இணங்கி இருக்கவில்லை. | சில செலவின விடயங்களில் காணப்படுகின்ற நிதிஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கும் போது காணப்படுகின்ற நிதிஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகள், பொறுப்புக்கள் அறிக்கையிட முடியாதிருந்தமை மேற்கூறப்பட்ட வேறுபாட்டிற்குக் காரணமாகும். | முன்னைய ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்பட்ட கடப்பாடுகளை சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு. | - | 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 இன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் அது முடிவடைந்ததும் உடனடியாக வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | 7,488,596 | ரூபா 7,488,596 கூட்டுத்தொகையான 10 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள், அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ அல்லது கூடிய விரைவில் மீளச் செலுத்துவதற்கோ அல்லது ஒப்பந்தகாரர் தொடர்பாக ஏற்படுமிடத்து ஒப்பந்தங்களில் இருந்து நட்டத்தை மீள அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்கள் புதிய ஊடக நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரியதாக நிறுத்திவைக்கப்பட்ட வைக்கப்பட்ட தொகையாகும். நட்டத்தை அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்படவில்லை. 2023 மார்ச் 29 ஆம் திகதி வெகுசன | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஊடக அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது இணங்கிய பிரகாரம் இந்த வைப்புப் பணத்தை அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 802(1) | - | வாகனங்கள் செயற்பாடற்று அல்லது விளைவற்றுக் காணப்படுகின்றமையை நிறுவனத் தலைவரால் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரையில் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 18,400,000 பெறுமதியான 02 வாகனங்கள் 06 மாதம் முதல் 23 மாதம் வரையான காலத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | அதில் குறிப்பிடப்பட்ட வாகனங்களுக்கிடையில் இரண்டு வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடு முடிவடைந்தமையினால் பழுதுபார்க்கப் படாதிருந்ததுடன், அது 2023 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டின் கீழ் பழுதுபார்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 | | அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றைக் கையேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைக்க வேண்டிய 33 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் பிணை வைக்கவேண்டிய 33 உத்தியோகதர்கள் இனங்காணப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பிணைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளல் 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 05/2008(1) ஆம் பந்தி | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் தமது நிறுவனத்திற்காக பிரஜைகள் சேவை நலன் விஞ்ஞாபனம் அறிமுகப்படுத்த வேண்டியமைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அரசாங்க நிறுவனத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளை விரைவாக, செயற்திறனாக, தரமாக மற்றும் தொடர்ச்சியாக நிறைவேற்றப்படுகின்றமை எழுத்து மூல கடப்பாடாக இருந்ததுடன், முறையாக தாயாரிக்கப்படுகின்ற விஞ்ஞாபனம் அலுவலக சூழலில் வெளியில் தெரியும் வகையில் காட்சிப்படுத்த வேண்டியிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அரசாங்கத்தின் கணக்குக் குழுவின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிறுவனத்தின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீடுகளின் போது இந்த தேவை அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தால் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கி நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரஜைகள் சேவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.4 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 179,740 ஆன கடன்மீதி அறவிடப்படாதிருந்ததுடன், அந்த மீதி 05 வருடங்களை விஞ்சியிருந்தது. | திரு.எம்.ஆரியரத்ன (எழுதுவினைஞர்) அவரின் நிலுவைக் கடன் மீதி ரூபா 56,265.00 ஆகும். இந்த நிலுவைக் கடன் தொகையை தீர்த்துவைக்குமாறு 2023.01.05 ஆம் திகதி கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக இதுவரையும் எந்தவொரு பதிலும் கிடைத்திருக்கவில்லை.<br><br>திரு.டீ.சீ.எல்.த.சில்வா என்பவரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 127,752.00 ஆகும். அந்த கடன் மீதியைத் தீர்த்து வைக்குமாறு 2022 திசெம்பர் 28 ஆம் திகதி கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிடுவதற்கு போதியளவான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 51 செயற்பாடுகளை நிறைவேற்றுவவதற்கு முடியாதிருந்ததுடன் 13 செயற்பாடுகளின் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைந்த பௌதீக செயல் முன்னேற்றம் ஆகும். 11 செயற்பாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட இலக்கினை விஞ்சி கணிசமான செயலாற்றல் அதாவது 149 சதவீதத்திற்கும் 1107 சதவீதத்திற்கும் இடையிலான | அதில் சில செயற்பாடுகளில் செயல்முன்னேற்றம் தொடர்பான தரவுகளை உள்ளடக்குவதில் வழுக்கள் காணப்பட்டமை, அவ்வப்போது ஏற்படுகின்ற தேவையின் அடிப்படையில் அதிக செயலாற்றலைக் காண்பித்தல், நிதி ஏற்பாடு கிடைக்காமை / போதியளவு இல்லாமை என்பவற்றின் | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வீச்சைக் காண்பித்திருந்தது. அதன் பிரகாரம் திட்டங்களைத் தயாரித்தல் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | காரணமாக செயலாற்றலில் முரண்கள் காணப்பட்டதுடன், உரிய வழுக்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | |

**3.2 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் தமது நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டின் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் குறித்துரைத்த படிவத்தில் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்று பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதித் திணைக்களம் என்பவற்றுக்கு அனுப்பவேண்டி இருந்த போதிலும் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பு சரியானதாகும். எதிர்காலத்தின் போது தாமதமின்றி பெறுகைத் திட்டத்தை சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளை நிரற்படுத்தி பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்க வேண்டி இருந்ததுடன் அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை விரிவாகத் தயாரித்தல் வேண்டும். எனினும் திணைக்களம் தயாரித்த பெறுகைத் திட்டம் 2022 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். அதன் காரணமாக பெறுகைகள் திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், பெறுகைகள் திட்டம் 4.2.2(உ) இன் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். எதிர்வரும் 03 ஆண்டு காலத்திற்காக பெறுகைகள் திட்டம் தயாரிப்பதற்கும் ஆகக் குறைந்தது 06 மாதங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவுகளை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற அபாயங்களை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்கான படிமுறையாக சரியான திட்டம் தயாரித்தல், | தற்போது திணைக்களத்தில் நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் சரியான திட்டமொன்றைத் தயாரித்தல், உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல் மற்றும் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல் மற்றும் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு குழு ஒன்று நியமித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்திற்காக 2023 மே 08 ஆந் திகதி வரை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டடிருக்கவில்லை. | அரசாங்க தகவல் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்கு தபால் திணைக்களத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளராக செயற்படுகின்ற திரு. ரி.பி. ஹெட்டிஆராய்ச்சி என்ற உத்தியோகத்தர் 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். ஆரச கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது | தற்போது மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் போது தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மனித வள அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஷ்ட நிலையில் 08 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 89 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 24 வெற்றிடங்களும் ஆக 121 வெற்றிடங்கள் காணப்பட்டமை ஆக்க பூர்வமான சேவை மட்டத்தை பேணிச் செல்வதில் தாக்கமளித்திருந்தது. | சிரேஷ்ட நிலையின் பதவிகளுக்காக உள்ளக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலையின் உத்தியோகத்தர்களின் திணைக்களமயப்படுத்தப்பட்ட வெற்றிட பதவிகளுக்காக அவ்வப்போது நிறுவனங்கள் கலைக்கப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அரசாங்கத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் படி ஆட்சேர்ப்பினைச் செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. ஒன்றிணைந்த சேவையின் பதவிகளுக்காக நியமித்தல் அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் நியமித்தல், இடமாற்றல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | சரியாக வேலைகளை கையளித்தல், பதவி உயர்வுத் திட்டத்தை பின்பற்றி ஆக்க பூர்வமான சேவையொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |